**மே – 02**

# தேசியச் செய்திகள்

## அடல் புதிய இந்தியா சவால்

- அடல் புத்தாக்கத் திட்டத்தின் (Atal Innovation Mission-AIM) கீழ் நிதி ஆயோக் அமைப்பானது அடல் புதிய இந்தியா சவால் என்ற திட்டத்தை (Atal New India Challenge) துவங்கியுள்ளது. மக்களுக்கு தொடர்புடையதாய் உள்ள பொருத்தமான தொழில் நுட்பங்கள் மற்றும் புத்தாக்கங்களை உருவாக்கி அவற்றை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்தொடக்கத்திற்காக அடல் புத்தாக்கத் திட்ட அமைப்பானது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத் துறை அமைச்சகம், மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல்வாழ்வு அமைச்சகம், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகத்துடன் கூட்டிணைவை ஏற்படுத்தியுள்ளது.
- 1956 மற்றும் 2013-ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act) கீழ் பதிவு செய்துள்ள இந்திய நிறுவனங்கள் சிறு, குறு, நடுத்தர தொழிற்துறை நிறுவனங்கள் (MSMEs), ஸ்டார்ட்-அப்கள், தனியார் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு நிறுவனங்கள், கல்வியியல் நிறுவனங்கள் மற்றும் கல்வியலாளர்கள் என அனைவருக்கும் இத்திட்டத்தில் அனுமதி அளிக்கப்படும்.

## UNCCD –யின் ஆசிய பசுபிக் பிராந்திய பயிற்சி பட்டறை

- பாலைவனமாகுதலைத் தடுப்பதற்கான ஐ.நா. உடன்படிக்கையின் (United Nations Convention to Combat Desertification- UNCCD) ஆசிய-பசுபிக் பிராந்திய பயிற்சி பட்டறை (Asia Pacific Regional Workshop) அண்மையில் புது தில்லியில் நடைபெற்றுள்ளது.
- பாலைவனமாகுதலைத் தடுப்பதற்கான ஐ.நா. உடன்படிக்கை அமைப்பு மற்றும் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம் (Ministry of Environment, Forest and Climate Change -MoEFCC) ஆகியவை ஒன்றாக கூட்டிணைந்து இப்பயிற்சிப் பட்டறையை நடத்தியுள்ளன.
- நிலச் சீர்கேடு அடைதல் (land degradation) மீதான அறிக்கை மற்றும் கண்காணிப்பிற்கு ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் திறனை கட்டமைப்பதற்காக இந்த 4 நாள் மாநாடு புது தில்லியில் நடத்தப்பட்டுள்ளது.
- நிலச் சீர்கேடு அடைவினை தடுப்பதற்கான அரசு சாரா தொண்டு நிறுவனமான கன்சர்வேஷன் இண்டர்நேஷனல் (Conservation International) எனும் அமைப்பினால் கண்டுபிடிக்கப்பட்ட "Trends Earth" எனும் நடப்பு நிலை அறிவியல் தொழிற்நுட்ப கருவியின் பயன்பாடு பற்றி இப்பயிற்சிப் பட்டறையில் பங்கேற்பாளர்களுக்கு பயற்சியளிக்கப்பட்டது.
- பாலைவனமாகுதலைத் தடுப்பதற்கான ஐ.நா. உடன்படிக்கையின் உறுப்பினர்கள்

குறிப்பிட்ட சரியான நேரத்தில், குறிப்பாக நிலச் சீர்கேடடைவு நடுநிலைமை (Land Degradation Neutrality - LDN) மீதான இலக்கு 15.3-ற்கான தங்களுடைய தேசிய அறிக்கையை சமர்ப்பிக்க இந்த பணியரங்கு ஓர் மேடையினை வழங்குகின்றது.

**பாலைவனமாகுதலைத் தடுப்பதற்கான ஐ.நா. உடன்படிக்கை**

- பாலைவனமாகுதல் (desertification) மற்றும் பிற நிலச் சீர்கேடடைவுப் பிரச்சினைகளை களைவதற்காக உண்டாக்கப்பட்ட ஒரே சர்வதேச சட்ட பிணைப்புடைய உடன்படிக்கையே UNCCD ஆகும்.
- இந்த உடன்படிக்கை 1994-ஆம் ஆண்டு ஐ.நா.வில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இது 1996-ல் நடைமுறைக்கு வந்தது.
- இந்தியா இந்த உடன்படிக்கையின் உறுப்பு நாடாகும்.
- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகமானது இந்தியாவில் இம்மாநாட்டிற்கான முதன்மை அமைச்சகமாகும். மேலும் பிற இரு ரியோ உடன்படிக்கைகளுக்கும் இது முதன்மை அமைச்சகமாகும்.
- அந்த இரு ரியோ உடன்படிக்கைகளாவன
    - பருவநிலை மாறுபாடு தடுப்பிற்கான ஐ.நா. கட்டமைப்பு உடன்படிக்கை (United Nations Framework Convention to Combat Climate Change-UNFCC)
    - உயிரியல் பல்வகைத்தன்மை மீதான உடன்படிக்கை (Convention on Biological Diversity)
- இந்த இரு உடன்படிக்கைகளும் 1992-ஆம் ஆண்டு பிரேஸிலின் ரியோ டி-ஜெனிரோ நகரில் நடைபெற்ற புவி மாநாட்டில் (Earth Summit) தோற்றுவிக்கப்பட்டன.

## UNCCD – Objectives and Implementation Activities

1. 47.2% of earth's territory is dryland; 1.2 billion inhabitants; many impoverished;
2. UNCCD adopted in 1994 to promote measures for combating desertification and to facilitate international cooperation;
3. UNCCD with 192 members;
4. More than 60 countries have adopted national action programmes;
5. Sub-regional and regional cooperation has been promoted through action programmes;
6. Promoting cooperation on scientific and technical matters through UNCCD Group of Experts and Committee on Science and Technology
7. Global Environment Facility (GEF) designated as a financing mechanism; 250 million USD was allocated

# சர்வதேசச் செய்திகள்

## அமைதி திட்டம் - போர் பயிற்சி

- 2018-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரஷ்யாவில் நடைபெற உள்ள அமைதி திட்டம் (Peace Mission) எனும் பன்-நாட்டு பயங்கரவாத எதிர்ப்பு கூட்டுப்போர் பயிற்சியில் (multi-nation counter-terror exercise) பரம போட்டி நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் முதல் முறையாக பங்கெடுக்க உள்ளன.
- சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shanghai Cooperation Organisation - SCO) பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அமைதி திட்டம் எனும் இந்த கூட்டுப் போர் பயிற்சியானது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பினுடைய கட்டமைப்பின் கீழ் இரஷ்யாவில் நடைபெற உள்ளது.
- இந்த போர் பயிற்சியானது இரஷ்யாவின் உரால் மலைகளில் (Ural Mountains) நடைபெற உள்ளது.

### *ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பினைப் பற்றி*

- சீனாவின் பெய்ஜிங்-ஐ தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது யூரேஸியப் பிராந்தியத்தின் (Eurasian) ஓர் அரசியல் பொருளாதார, பாதுகாப்பு அமைப்பாகும்.
- 2001 ஆம் ஆண்டு இது நிறுவப்பட்டது.

### *இதன்முழு நேர உறுப்பினர்களாவன*

1. சீனா
2. இரஷ்யா
3. கஜகஸ்தான்
4. உஸ்பெகிஸ்தான்
5. தஜிகிஸ்தான்
6. கிர்கிஸ்தான்
7. இந்தியா
8. பாகிஸ்தான்

- ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான், மங்கோலியா ஆகியவை நடப்பில் இந்த அமைப்பின் கூர்நோக்கு நாடுகளாக (Observer) உள்ளன.
- கூர்நோக்கு நாடுகளாக இருந்து வந்த இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கு 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நடைபெற்ற SCO மாநாட்டில் முழு உறுப்பினர் தகுதி வழங்கப்பட்டது.
- ஷாங்காய் ஐந்து (Shanghai Five) எனும் பெயரில் 1996 ஆம் ஆண்டு இரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளை கொண்டு சீனா-வால் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது.

- 2005-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அஸ்தானா பிரகடனத்தின் மூலம் (Astana Declaration) SCO ஓர் பிராந்தியப் பாதுகாப்பு (Regional Security Organization) அமைப்பாக உருவானது.
- உறுப்பு நாடுகளிடையே இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதே (military cooperation) இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

### சர்வதேச புத்த மாநாடு

- 2562-வது புத்த ஜெயந்தியை நினைவு கூர்வதற்காக நேபாளத்தில் உள்ள லும்பினியில் சர்வதேச புத்த மாநாடு (International Buddhist Conference) நடத்தப்பட்டுள்ளது.
- 2018-ஆம் ஆண்டிற்கான இந்த சர்வதேச புத்த மாநாட்டின் கருப்பொருள் "லும்பினி நேபளம்: கடவுள் புத்தரின் பிறப்பிடம் மற்றும் புத்தத்துவம் மற்றும் உலக அமைதிக்கான நீரூற்று" (Lumbini Nepal: The birthplace of Lord Buddha and the fountain of Buddhism and world peace').
- புத்த மதத்தின் நிறுவனரான கௌதம புத்தரின் பிறப்பிடம் லும்பினியாகும்.
- இந்த மாநாட்டின் முடிவில் 10 குறிப்புகளுடைய லும்பினி பிரகடனம் (10 point Lumbini Declaration) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### உயிரி – பேரிடர் முதல் மாதிரி பயிற்சி

- விமான நிலையங்களில் CBRN அவசர நிலைமைகளுக்கு பதிலெதிர்ப்பு வழங்குவதற்கு விமானநிலைய அவசர நிலைமை கையாளுனர்களின் (Airport Emergency Handlers -AEHs) தயார் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தன்னுடைய முதல் மாதிரி பயிற்சியை (mock exercise) தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (National Disaster management Authority -NDMA) பாட்னா விமான நிலையத்தில் நடத்தியுள்ளது.
- CBRN அவசர நிலைமை என்பவை இராசயனம், உயிரியல், கதிரியக்கம் மற்றும் அணுசக்தி பொருட்களால் உண்டாகும் அச்சுறுத்தல் தொடர்பானவை (Chemical, Biological, Radiological and Nuclear material - CBRN).
- மேலும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆனது தேசிய பேரிடர் பதிலெதிர்ப்பு படையுடன் (National Disaster Response Force-NDRF) இணைந்து தன்னுடைய முழு அளவிலான முதல் உயிரியல் மேலாண்மை அவசர கால பயிற்சியையும் (Biological Management Emergency Exercise) நடத்தியுள்ளது.
- இந்தப் பயிற்சி நிகழ்ச்சியானது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் இந்திய விமானநிலைய ஆணையம் (Airports Authority of India -AAI) மற்றும் அணுசக்தி மருந்து மற்றும் பயன்பாட்டு அறிவியல் நிறுவனம் (Institute of Nuclear Medicine & Allied Sciences INMAS) ஆகியவற்றுடனான கூட்டுறவோடு இணைந்து பாட்னாவில் உள்ள லோக் நாயக் ஜெயப் பிரகாஷ் விமான நிலையத்தில் (Lok Nayak Jayaprakash Airport) நடத்தப்பட்டுள்ளது.

#### *தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்*

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் பேரிடர் மேலாண்மைக்கான நாட்டின் உச்ச

சட்ட அமைப்பாகும். இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.

- இதன் விதிமுறைகள் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 (Disaster Management Act, 2005) என்ற சட்டத்தில் இடம்பெற்றுள்ளது.
- இது 2009 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- இந்தியப் பிரதமரைத் தலைவராகக் கொண்ட 9 உறுப்பினர்கள் அடங்கிய குழுவால் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் நிர்வகிக்கப்படுகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது 2018

- அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் குழுவிற்கு (Council of Scientific and Industrial Research-CSIR) 2018-ஆம் ஆண்டின் தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது (National Intellectual Property Award 2018) வழங்கப்பட்டுள்ளது.




- "முன்னணி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்/ வர்த்தகமயமாக்குதல் மற்றும் காப்புரிமைக்கான நிறுவனம்" (Top R&D Institution/Organization for Patents and Commercialization) எனும் வகைப்பாட்டில் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் குழுவிற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய அறிவுசார் சொத்துரிமை விருதானது மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் (Ministry of Commerce and Industry) கீழ் செயல்படுகின்ற இந்திய அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தால் (Indian Intellectual Property Office) உலக அறிவுசார் சொத்துரிமை தினமான ஏப்ரல் 26 ஆம் தேதி அன்று பல்வேறு வகைப்பாடுகளில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற ஓர் விருதாகும்.

### *அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் குழு பற்றி*

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி குழுவானது' ஆனது தன்னாட்சியுடைய, நாட்டின் முன்னணி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (Research & Development) நிறுவனமாகும்.
- இது 1942ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- 1860ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (Societies Registration Act-1860) கீழ் அமைக்கப்பட்ட ஓர் தன்னாட்சியுடைய ஆராய்ச்சி நிறுவனமாகும்.
- பிரதமர் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் குழுவின் தலைவராவார்.
- CSIR மத்திய அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப அமைச்சகத்தின் (Ministry of Science and Technology) கீழ் செயல்படுகின்றது.

## சரஸ்வதி சம்மான் விருது



- குஜராத்தி கவிஞர், நாடக ஆசிரியர் மற்றும் கல்வியியலாளரான சிதன்சூ யஸஸ்சந்திரா (Sitanshu Yashaschandra) 2017-ஆம் ஆண்டிற்கான சரஸ்வதி சம்மான் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 2009-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "வகார்" (Vakhar) எனும் கவிதைகளின் தொகுப்பிற்காக சிதன்சூ யஸஸ்சந்திராவிற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- தற்போது வழங்கப்பட்டிருக்கும் இவ்விருதானது சரஸ்வதி சம்மான் விருதின் 27வது பதிப்பாகும்.
- இவர் பத்ம பூஷண் விருதினையும், சாஹித்ய அகாடமி விருதினையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- இவர் ஒடிஸ்ஸேவ்ஸ்னு ஹலேசு (Odysseusnu Halesu), ஜடாயு (Jatayu), வாகர் (Vakhar) என 3 கவிதை தொகுப்புகளை எழுதியுள்ளார்.

### *சரஸ்வதி சம்மான் விருதினைப் பற்றி*

- சரஸ்வதி சம்மான் விருது ஆண்டுதோறும் கடைசி பத்தாண்டுகளில் வெளியிடப்பட்ட சிறந்த கவிதைகள் அல்லது கவிதை இலக்கியப் படைப்புகளுக்கு வழங்கப்படுகிறது .
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பட்டியல் எட்டில் (Schedule VIII) குறிப்பிடப்பட்டிருக்கும் இருபத்து இரண்டு மொழிகளில் எழுதப்படும் கவிதை இலக்கியப் படைப்புகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- கல்வியின் கடவுளான சரஸ்வதியின் பெயரால் வழங்கப்படும் இவ்விருது இலக்கிய உலகில் மிக உயரியதாக கருதப்படுகிறது.
- சரஸ்வதி சம்மன் விருது கே.கே.பிர்லா அமைப்பால் 1991 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.
- K.K. பிர்லா அறக்கட்டளையானது ஹிந்தி எழுத்தாளர்களுக்கு வியாஸ் சம்மான் விருதினையும் (Vyas Samman), ராஜஸ்தானி எழுத்தாளர்கள் மற்றும் ஹிந்தி எழுத்தாளர்களுக்கு பிஹாரி புரஸ்கார் விருதினையும் (Bihari Puraskar) வழங்குகின்றது.

# முக்கிய தினங்கள்

## உலக அறிவுசார் சொத்துரிமை தினம் - ஏப்ரல் 26

- படைப்பாக்கம் (Innovation) மற்றும் புத்தாக்கத்தை (creativity) ஊக்குவிப்பதில் அறிவுசார் சொத்துரிமைகள் (காப்புரிமை, வர்த்தக குறியீடு, தொழிற் வடிவமைப்பு, பதிப்புரிமை - patents, trademarks, industrial designs, copyright) வகிக்கும் செயற்பாத்திரத்தின் மீது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் உலகம் முழுவதும் ஏப்ரல் 26-ஆம் தேதி உலக அறிவுசார் சொத்துரிமை தினம் (World Intellectual Property Day) கொண்டாடப்படுகின்றது.
- 2018-ஆம் ஆண்டிற்கான உலக அறிவுசார் தினத்தின் கருப்பொருள் "மாற்றத்திற்கு ஆற்றல் அளித்தல், புத்தாக்கம் மற்றும் படைப்பாக்கத்தில் பெண்கள்" (Powering change: Women in innovation and creativity).




- உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனத்தினால் (World Intellectual Property Organization - WIPO) 2010-ஆம் ஆண்டு உலக அறிவுசார் சொத்துரிமை தினம் தோற்றுவிக்கப்பட்டது.
- உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனத்தை தோற்றுவித்த உடன்படிக்கை 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 26-ஆம் தேதி அன்று செயல்பாட்டிற்கு வந்தததை குறிப்பதற்காக அத்தினத்தன்று அறிவுசார் சொத்துரிமை தினம் கொண்டாடப்படுகின்றது.

- - - - - - - - - - - - - -